



Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Tiruppur
Date:2023.06.20 19:00:16

திரு.ராகேஷ் ரவி
அளவர்/ உதவி வரைவாளர்

திருமதி.ரா.செபஸ்திரோசாலி
மேற்பார்வையாளர்.

# நகர் ஊரமைப்பு துறை (DTCP)
## மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்
## வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி, சேனாபதிபாளையம் கிராமம், ரீ.ச.எண்-1198/C2-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : (1:400)(1செ.மீ = 4.0மீ) (திட்டமில்லா பகுதி)

இணையதள விண்ணப்ப எண்:- **WC4P7WAO** நாள்:-16.05.2023

வ

**குறிப்பு :**

| | |
|---|---|
| மனை உட்பிரிவின் பரப்பு | : 0.17 ஏக்கர் (அ) 688.00 ச.மீ |
| ஒதுக்கிய மனைகள் | : 5 |
| மனை உட்பிரிவின் எல்லை | : |
| நிலையிலுள்ள சாலை / அணுகு சாலை | : |

**பொது ஒதுக்கீடுகள் (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)**

I. மனை உட்பிரிவு சாலையின் மூலைமுடக்கு பரப்பு : 3.375 ச.மீ

**II. பூங்கா**

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு : 688.00ச.மீ x 10% = 68.00ச.மீ

ஒதுக்கப்பட்ட பூங்கா பரப்பு (அ)பூங்கா பரப்பிற்கு ஈடான வழிகாட்டு மதிப்பீடு தொகை — 68.00 ச.மீ (மனுதாரரால் அரசு வழிகாட்டி மதிப்பு உரிய அரசு கணக்குதலைப்பில் 08.06.2023 அன்று செலுத்தப்பட்டுள்ளது)

**மூலை முடக்கு:**

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.50மீx1.50மீ விடப்படல் வேண்டும்.

12.0மீ முதல் 30.5மீ அகலம் உள்ள சாலைகளுக்கு 4.5மீx4.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை எண்:18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (MA-1) நாள் :04.02.2019 (ம)அரசாணை எண்:16 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்: 31.01.2020 ஆகியவற்றின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண் 181 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020- ன் படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தேவையான தார் சாலை வசதி, மழைநீர் வடிகால் வசதிகள், மேல்நிலைத்தொட்டி, தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மனுதாரரால் அமைக்கப்பட்டு அதனை வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி தலைவரால் உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
3. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சி தலைவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வரைபடநகலோடு, நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6மீ X1.2மீ என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள் தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர் உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து யூனியன் பொறியாளரிடமிருந்து தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.
8. இறுதி ஒப்புதல் அளிக்கும் முன்பு SPLAY ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

**SWP/DTCP/TIRUPPUR LAYOUT APPROVAL NO- 168 /2023**

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
திருப்பூர் மாவட்டம்.